இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 25.12.2025

# அணு அணுவாய் ஆபத்து!

அணுசக்தி குறித்த ஒரு முக்கியமான சட்டத்தை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தாக்கல் செய்ய அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ‘இந்தியாவின் மாற்றத்துக்கான அணுசக்தி மேம்பாடு நிலைத்த பயன்பாடு’ (SHANTI) மசோதா என்று பெயர். ‘சாந்தி’ மசோதா என்கிறார்கள். அமைதிக்கு வழிவகுக்கும் மசோதாவாக இது இல்லை என்பதே உண்மை.

நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட இந்த மசோதா, 1962 ஆம் ஆண்டு அணுசக்தி சட்டம், 2010ஆம் ஆண்டு அணுசக்தி சேதத்திற்கான சிவில் பொறுப்புச் சட்டம் ஆகியவற்றை ரத்து செய்கிறது. விரிவான ஒரு சட்டத்தால் அதனை மாற்றி விட்டது.

**“அணுசக்தியை நிர்வகிக்கும் இந்தியாவின் சட்ட கட்டமைப்பைப் புதுப்பிப்பதற்கான ஒரு முக்கிய முயற்சி” என்று இதனை ஒன்றிய அரசு குறிப்பிடுகிறது.**

“இந்தியாவின் நீண்டகால எரிசக்தி மற்றும் காலநிலை இலக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை 2070 ஆம் ஆண்டுக்குள் கார்பன் நீக்கத்திற்கான நாட்டின் செயல்திட்டத்தையும், 2047ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி திறனை அடைவதற்கான இலக்கையும் கோடிட்டுக் காட்டுகிறது. இந்த நோக்கங்களை நிறைவேற்ற, உள்நாட்டு அணுசக்தி வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, பொது மற்றும் தனியார் துறைகளின் தீவிர பங்கேற்பை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை மசோதா வலியுறுத்துகிறது.

**அணுசக்தி உற்பத்தி அல்லது பயன்பாட்டில் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட நபர்களுக்கு உரிமம் மற்றும் பாதுகாப்பு அங்கீகாரத்திற்கான விதிகளை மசோதா வகுப்பதுடன், இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான தெளிவான காரணங்களையும் வழங்குகிறது. சுகாதாரம், உணவு மற்றும் விவசாயம், தொழில் மற்றும் ஆராய்ச்சி போன்ற துறைகளில் அணு மற்றும் கதிர்வீச்சு தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்த முயல்கிறது, அதே நேரத்தில் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புதுமை நடவடிக்கைகளுக்கு உரிமத் தேவைகளிலிருந்து விலக்கு அளிக்கிறது” என்று ஒன்றிய அரசு சொல்கிறது.**

**இதில் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியது, அணுசக்தித் துறையில் தனியார் பங்களிப்பை அனுமதித்து விட்டார்கள் என்பதுதான்.**

உலக அளவில் அணு மின்சக்தி உற்பத்தியில் அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், ஜெர்மனிக்கு அடுத்த இடத்தில் இந்தியா இருக்கிறது. தற்போது நாட்டில் அணுசக்தித் துறையின் மின் உற்பத்தித் திறன் 8.78 ஜிகா வாட்டாக உள்ளது. இதனை 2047க்குள் 100 ஜிகாவாட்டாக அதிகரிக்கும் நோக்கில் ‘சாந்தி’ மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது என்று வெளியில் சொல்கிறார்கள். இது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்ட ஒன்றிய அறிவியல் துறை அமைச்சர் ஜிதேந்திரா சிங் அவையில் பேசும் போது, “இந்தியாவின் மொத்த எரிசக்தி தேவையை 10 விழுக்காடு அளவுக்கு அணுசக்தி வழியே நிறைவு செய்யப்படுகிறது” என்று சொல்லி இருக்கிறார்.

**இதில் அணுசக்தி சாதனங்களை விநியோகிக்கும் நிறுவனங்களின் பொறுப்பை நீக்கும் பிரிவு அடங்கி இருக்கிறது. தேச பாதுகாப்பு கேள்விக் குறியாகி இருப்பதை ஒன்றிய அரசு நினைக்கவில்லை. மறைக்கிறது.**

அணுசக்தி உற்பத்தியானது இதுவரை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. ஏனென்றால் அணுசக்திகள் போன்றவை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும். அணுவை ஆக்க வேலைக்கும் பயன்படுத்தலாம், அழிவு வேலைக்கும் பயன்படுத்தலாம். யார் உருவாக்குகிறார்கள், என்ன நோக்கத்துக்காக உருவாக்குகிறார்கள், யார் வாங்குகிறார்கள், என்ன நோக்கத்துக்காக வாங்குகிறார்கள் என்பதைப் பொறுத்து அதனை வரையறுக்க வேண்டும்.

**அரசின் அணுசக்தி நிறுவனங்கள் செய்துள்ள சாதனைகளை மட்டப்படுத்துவதைப் போல இது அமைந்துள்ளது. நாட்டின் தேவைக்கானதை இவை செய்யும், செய்து தரும் திறன் பெற்றவையாக உள்ளன. அப்படி இருக்கும் போது தனியாரை நுழைக்க வேண்டிய தேவை என்ன வந்தது? அணு பயன்பாட்டில் அரசின் நோக்கத்தைப் போல தனியார் இருப்பார்கள் என நினைக்க முடியுமா?**

அணுசக்தியில் நாம் நமது பொதுத்துறையைப் புறக்கணித்து, தனியார் துறையை ஊக்குவித்தால், அது தேசத்தின் நலனுக்கு உகந்ததாக இருக்காது.

இந்த விவாதத்தில் பேசிய காங்கிரஸ் எம்.பி. மணீஷ் திவாரி, **“அணுசக்தித் துறையில் தனியார் பங்களிப்பை அனுமதிக்கவே இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. அதானி குழுமம் இத்துறையில் ஆர்வம் காட்டிய நிலையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படுவது தற்செயலானதா?”** என கேள்வி எழுப்பினார்.

2010ஆம் ஆண்டின் அணுசக்தி பொறுப்புச் சட்டத்தின்படி, விபத்து ஏற்பட்டால் உபகரணங்களை வழங்கியவர்களிடம் (Suppliers) நஷ்ட ஈடு கோரும் உரிமை ஆப்பரேட்டர்களுக்கு இருந்தது. ஆனால், புதிய மசோதாவில் இந்த விதி நீக்கப்பட்டுள்ளது. இது வெளிநாட்டு நிறுவனங்களை விபத்து பொறுப்பிலிருந்து விடுவிக்கும் முயற்சியாகும். பன்னாட்டு வழங்குபவர்கள், தங்களது தவறுகளால் ஏற்படும் இழப்பீட்டுக்கு அஞ்சி முதலீடு செய்ய மறுத்து வந்தனர். அவர்களைப் பாதுகாக்கவே சட்டம் மாற்றப்பட்டு உள்ளது.

**தி.மு.க. சார்பில் மாநிலங்களவையில் உரையாற்றிய மூத்த வழக்கறிஞர் வில்சன் எம்.பி., “இந்த மசோதா ‘சாந்தி’க்கு வழங்காது. அணு அதிர்ச்சி மூலம் சாந்தியைப் பறிக்கும். நமது நாட்டின் அமைதி, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும். அணுசக்தியை இறையாண்மைச் செயல்பாடுகளில் இருந்தும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தும் அகற்ற முயற்சிக்கிறது. ஒரு பொறுப்பற்ற, ஆபத்தான செயலைச் செய்கிறீர்கள். ஒரு தனிநபர் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறலாம். ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டு நெருக்கடி, நாட்டின் நெருக்கடியாக மாறியதை இண்டிகோ விவகாரத்தில் அறிந்தோம். அணுசக்தி என்பது மிகமிக எச்சரிக்கையாகக் கையாள வேண்டியது” என்று மிகக் கடுமையான எச்சரிக்கை செய்துள்ளார்.**

**அணுசக்தி என்பது வணிகப் பொருள் அல்ல.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2025) தந்தை பெரியார் அவர்களின் 52வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, அண்ணா சாலை, சிம்சன் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கே. சேகர்பாபு, முனைவர் டி.ஆர்.பி.ராஜா, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, ஆர்.கிரிராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.கே.எஸ்.இளங்கோவன், எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், நா.எழிலன், த.வேலு, ப. ரங்கநாதன், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2025) போக்குவரத்துத் துறை சார்பில் சென்னை, தீவுத்திடல் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 34.30 கோடி ரூபாய் மதிப்பிலான பல அச்சுகள் (MULTIAXLE) கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகள் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன், VE Commercial Vehicles முதுநிலை துணை தலைவர் சுரேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.34.30 கோடி மதிப்பிலான

# 20 அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச.25-**

**அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.34.30 கோடி மதிப்பிலான பல அச்சுகள் (MULTI AXLE) கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகள் இயக்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2025) போக்குவரத்துத் துறை சார்பில் சென்னை, தீவுத்திடல் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு விரைவுப் போக்கு வரத்துக் கழகத்திற்கு 34.30 கோடி ரூபாய் மதிப்பிலான பல அச்சுகள் (MULTIAXLE) கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகள் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இப்பேருந்து சேவை தமிழ்நாடு போக்குவரத்து துறை மூலமாக முதல் முறையாக தமிழ்நாட்டின் பல்வேறு தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசு போக்குவரத்துக் கழக பொன்விழாவையொட்டி 1,05,778 ஊழியர்களுக்கு 3.33 கோடி ரூபாய் மதிப்பிலான சுவர் கடிகாரங்கள் வழங்கும் நிகழ்வினை 10 ஊழியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்,

**பல அச்சுகள் (MULTIAXLE) கொண்ட 20 அதிநவீன குளிர் சாதன புதிய பேருந்தின் சிறப்பம்சங்கள்**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பல அச்சுகள் (MULTIAXLE) கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன வசதி கொண்ட புதிய பேருந்தில்:

**பயணிகளுக்கு உயர்தர மற்றும் வசதியான இருக்கை அமைப்பு** 2×2 சீட்டிங் அமைப்புடன் அதிகபட்சம் 51 வசதியான இருக்கைகள், வெளிப்புற காட்சியை ரசிக்க விசாலமான Panoramic ஜன்னல்கள், உயர்தர மேல்நிலை பொருட்கள் வைக்குமிடம் (Overhead Luggage Compartment);

**UNOMINDA (Harita) VFX09 உயர்தர இருக்கைகள்** Calf Support வசதியுடன் கூடிய இருக்கைகள், இரட்டை USB Mobile Charging Ports, பத்திரிகைகள், பாட்டில் ஹோல்டர், காலணி வைக்கும் இடம்;

வசதியான மற்றும் பாதுகாப்பான ஓட்டுநர் கேபின் மனித உடல் அமைப்பிற்கு ஏற்ற Ergonomic Control Layout, வளைந்த வடிவ Dashboard,

AirSuspension கொண்ட ஓட்டுநர் இருக்கை, முழங்கால் பாதுகாப்பு அமைப்பு (Knee Impact Protection System);

மேம்பட்ட PX Suspension System மேம்பட்ட Steering Stability, Air Springகளில் குறைந்த அழுத்தம், Shock Absorber System. EVSC, ESP, ASR உள்ளிட்ட மேம்பட்ட பிரேக்கிங் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள், பயணிகள் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தும் தீ பாதுகாப்பு அமைப்பு, அவசரநிலையில் விரைவாக பயணிகளை வெளியேற்ற •அகலமான Roof Escape Hatch, முன், பின் மற்றும் பக்க மோதல்களில் தாக்கத்தை குறைக்கும் • FUP / FIP / SUPD பாதுகாப்பு அமைப்புகள், • மேம்பட்ட Rollover & Pedestrian பாதுகாப்பு வசதி;

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சங்கள்** BSVI Emission Normsக்கு முழுமையான இணக்கம், EGR + SCR தொழில்நுட்பம் மூலம் NOx & Emission குறைப்பு மற்றும் குறைந்த கார்பன் உமிழ்வு, அதிக வலிமையான Monocoque / Reinforced Body Structure, நீண்ட ஆயுட்காலத்திற்கான Anti Corrosion Treatment, அவசரகாலத்தில் பயணிகள் வெளியேறுவதற்கு அவசரகால வெளியேறும் வழி, விபத்துகளை தவிர்த்திட வாகனத்தின் முன் மற்றும் பின் பகுதிகளில் கேமராக்கள், வாகன செயல்திறன் மற்றும் கோளாறுகளை உடனுக்குடன் கண்டறிய Electronic Diagnostic Control வசதி, ரிவர்ஸ் சென்சார் வசதி மற்றும் கேமரா, வாகனத்தை கண்காணித்திட Bus Tracking System வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இப்பேருந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**அரசு போக்குவரத்துக் கழக பொன்விழாவையொட்டி ஊழியர்களுக்கு சுவர் கடிகாரங்கள் வழங்குதல்**

பேருந்து போக்குவரத்தை நாட்டுடைமையாக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் அரசு போக்குவரத்து கழகங்கள் தொடங்கப்பட்டு 50ஆம் ஆண்டு (1976 2025) பொன்விழா நடைபெற்று வருவதையொட்டி போக்குவரத்து கழகங்களில் பணியாற்றி வரும் 1,05,778 ஊழியர்களுக்கு 3.33 கோடி ரூபாய் மதிப்பிலான சுவர் கடிகாரங்கள் வழங்கிடும் விதமாக முதலமைச்சர் அவர்கள் நேற்று 10 போக்குவரத்து ஊழியர்களுக்கு சுவர் கடிகாரங்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், சா. சி. சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, ஆ.ராசா , போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன், VE Commercial Vehicles முதுநிலை துணை தலைவர் சுரேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



‘வெல்லும் தமிழ்ப்பெண்கள்’ மேற்கு மண்டல மாநாடு குறித்து திருப்பூர் மாவட்டம், பல்லடம், காரணம் பேட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மஹாலில் மாவட்ட, மாநகர, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில், கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வரவேற்புரையில், கழக துணைப் பொதுச் செயலாளர்கள் அந்தியூர் ப.செல்வராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை மு.பெ.சாமிநாதன், வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மகளிர் அணி நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் மேற்கு மண்டல கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.